**அ.வ.எண்: 79/2010** **நாள்: 29.07.2025**

வா.சா.4 - கார்த்திக்கேயன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>2 முதல் 6, 8 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சிவகங்கை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் OS.34/2010 என்ற பாகப்பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கிற்கான பிராது நகல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சொத்துக்களை நீக்கி சேர்ப்பதற்காக இடை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்களை காளியம்மாள் என்பவர் சிதம்பரம் சேர்வை என்பவரின் வாரிசு என்கிற அடிப்படையில் பாகப்பிரிவினை கோரியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் சர்வே எண். 59/6 சம்மந்தப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 59/6பி-யின் மற்றொரு பகுதி மட்டும் தான் சம்மந்தப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சொத்து விவரத்தில் நான்குமாலில் காளியம்மாளுடைய சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. மேற்படி வழக்கில் சர்வே எண்.59/6பி - யின் எந்த பகுதி என்று குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.23 ஆவணம் எந்த சொத்திற்கும் சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மீனாட்சியம்மாளின் இறப்பு சான்றிதழான வா.சா.ஆ.24ல் கணவர் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.25 ஆவணம் சர்வே எண்.59/6பி க்கு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.59/6 ஏ, 6பி ஐ சுற்றி வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றால் ஆக்கிரமித்து வேலி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலியை 7ம் பிரதிவாதி ஆக்கிரமித்து வேலி அமைத்துள்ளார். மேற்படி சர்வே எண்.59/6பி-யில் 7ம் பிரதிவாதி மோட்டார் வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை 7ம் பிரதிவாதி எவ்வளவு காலமாக ஆக்கிரமித்துள்ளார் என்றால் 2009முதல் ஆக்கிரமித்துள்ளார். தாவா வழக்கில் மேற்படி சொத்தை குறித்து சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளேன்.

3. தாவா சொத்தின் அரசு வழிகாட்டின் மதிப்பீடு எவ்வளவு என்றால் ஒரு செண்டிற்கு ரூ.10,000 ஆகும். தாவா பிராதை திருத்தம் செய்யும் பொழுது மேற்படி சொத்தின் அரசு வழிகாட்டின் மதிப்பு எவ்வளவு என்றால் திருத்தப்பட்ட பிராதில்

சொத்தின் மதிப்பீட்டை நான் குறிப்பிடவில்லை. தாவா வழக்கில் சுவாதீன மீட்பு பரிகாரம் கேட்காததாலும் நீதிமன்ற முத்திரை கட்டணத்தை சரியாக செலுத்தாததாலும் தாவா பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.26 ஆவணமான அடங்கல் பதிவேட்டில் சர்வே எண். 59/6பி-யில் காளியம்மாளின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், மீனாட்சியின் கணவர் சிதம்பரம் பிள்ளையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சிதம்பரத்தின் பெயர் அவர் கூட்டு உரிமையாளரில் ஒருவர் என்ற அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.27 ஆவணமான கிராம கணக்கிலும் சர்வே எண் 59/6பி சிதம்பரத்தின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.28 ஆவணத்தில் மீனாட்சியம்மாள், காளியாம்மாள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.28 ஆவணத்தில் அசல் எப்பொழுது யாரிடமிருந்து கிடைத்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணமான பட்டா பாஸ்புத்தகத்தில் தவறு இருப்பது குறித்து எனக்கு 2009ம் ஆண்டு தான் தெரியும். வா.சா.ஆ.28 ஆவணத்தில் 7ம் பிரதிவாதியும் மற்றும் சிலர் நபர்களின் பெயரில் தான் கூட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ30 ஆவணம் எந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் சர்வே எண் 59/6பி யில் ஒரு பகுதிக்கு சம்மந்தப்பட்டது. மேற்படி ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணம் 1 ஏக்கர் ஆகும். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மொத்த சொத்தில் எங்குள்ளது என்றால் சர்வே எண்.59/6ஏ-க்கு தெற்கு பக்கம் உள்ளது.

5. மேற்படி சொத்தானது வா.சா.ஆ.30 ஆவணத்தில் எத்தானாவது இலக்கமாக உள்ளது என்றால் 9 இலக்கமாக உள்ளது (சாட்சி வா.சா.ஆ.30 ஆவணத்தை பரிசீலனை செய்து பதில் அளித்தார்.) மேற்படி சொத்தின் நான்குமால் சரியாகத்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்குமால் எதிலும் மீனாட்சி, காளியம்மாளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், அவரது வகையறாக்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சிதம்பரம் வகையறா என்பது மீனாட்சியம்மாளை குறிக்கிறது என்றால் சரிதான். மற்ற ஆவணங்களில் சிதம்பரம் வகையறா என்று குறிப்பிடப்பட்டுள்ளது மீனாட்சியும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் மீனாட்சி சேர்த்து குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.30 ஆவணத்தில்

தாவா சொத்து எந்த பகுதி என்று குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி ஆவணத்தில் உள்ள நான்குமால் மொத்த சொத்தான 5 ஏக்கர் 21 செண்டிற்கான நான்குமால் என்றால் சரிதான். வா.சா.ஆ.30 ஆவணத்திலுள்ள நான்குமாலும் பிராதில் உள்ள நான்குமாலும் வெவ்வேறு என்றால் சரிதான். வா.சா.ஆ.31, 32 ஆகிய ஆவணங்களில் மீனாட்சியம்மாள், காளியம்மாள் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.33, 34 ஆகிய ஆவணங்களில் தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த காலத்திலும் மீனாட்சி மற்றும் அவரது வகையறாக்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. Womens right to property Act 1937 சட்டத்தின் படி கணவனின் சொத்தில் உரிமைக் கோருகிறோம். தாவா பிராதில் 1 முதல் 5 இலக்க ஆவணங்கள் பற்றி தான் குறிப்பிட்டுள்ளேன் மற்ற ஆவணங்கள் குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்து நீதிமன்றத்தை குழப்பம் செய்யும் நோக்கத்துடன் தாவா வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எந்த காலத்திலும் மீனாட்சி மற்றும் அவரது வகையறாக்கள் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.